# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097116

1. District : மாவட்டம் சேலம். PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 10/AC/2018 Date: நாள் 18.05.2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம். Sections பிரிவுகள்: 7. ஊழல் தடுப்புச் சட்டம் 1988.
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   1) 15.5.2018 மதியம் 01.30 மணி [சேலம் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்திற்கு வெளியே]
   2) 17.05.2018 – காலை சுமார் 8 மணி [illegible]
   3) 17.05.2018 மாலை சுமார் 3.30 மணி [சேலம் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அலுவலகம்]

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் : 18.05.2018 – 09.00 மணி.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 18.05.2018 – 09.00 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்/ உறுப்பினர் -செயலர் அலுவலகம், சேலம் உள்ளூர் திட்டக் குழுமம். சேலம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S — District —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D.T. சிவானந்தம்.
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தியாகராஜன்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 5.3/2018.
   (d) Nationality : நாட்டினம் இந்தியர்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் விசைத்தறி.
   (g) Address : முகவரி 813/128. பாண்டுரங்கன் விட்டல் வீதி அம்மாபேட்டை, கிருஷ்ணம்பட்டி /தெரு, சேலம் 636006.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. சின்னதுரை, திட்டபார்வையாளர், நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்/ உறுப்பினர் -செயலர் அலுவலகம், சேலம் உள்ளூர் திட்டக் குழுமம். சேலம்.
   2) திரு. சந்தோஷ் [சின்னதுரையின் தனிப்பட்ட உதவியாளர்]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

D. T. Jeevanantham
18/5/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 18/5/18
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.5.2018 – 13.30 hrs.

Name: பெயர் N. K. ரவிச்சந்திரன்.
Rank: நிலை காவல் ஆய்வாளர்
உள்ள கமாரி
சேலம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

சமர்ப்பிக்கப்படுகிறது

18.05.2018-ம் தேதி காலை 09.00 மணிக்கு D.T ஜீவானந்தம், த/பெ. தியாகராசன், க.எண்.213/122, பாண்டுரங்கன் விட்டல் வீதி விஸ்தரிப்பு, கருங்கல்பட்டி, குகை, சேலம் 636 006 என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு,

அனுப்புதல் D.T ஜீவானந்தம், த/பெ. தியாகராசன், க.எண்.213/122, பாண்டுரங்கன் விட்டல் வீதி விஸ்தரிப்பு, கருங்கல்பட்டி, குகை, சேலம் 636 006. பெறுதல் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சொர்ணபுரி, சேலம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது மனைவி ஜெ. சுசீலா, மகன் ஜெ. சோனு, மருமகள் எஸ். கோகிலா, ஆகியோருடன் குடியிருந்து வருகிறேன். நான் மேற்படி முகவரியில் சொந்தமாக விசைத்தறி நடத்தி வருகிறேன். சேலம் வட்டம், அபானிகொண்டலாம்பட்டி கிராமம், பட்டா எண்.279, ரீ சர்வே எண்.8/2A ல் உள்ள நிலம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டதில் பிளாட் எண். 21 ல் பகுதியும் மற்றும் பிளாட் எண்.22 ஆகியவற்றில் மொத்தம் 1800 சதுர அடி கொண்ட மனை நிலத்தை 30.11.2006 ம் தேதியன்று என் தந்தை தியாகராஜன் எனக்கு தான செட்டில்மெண்டாக எழுதி கொடுத்திருந்தார். மேற்படி இரண்டு மனைகளுக்கும் அரசு அங்கீகாரம் பெறப்படாமல் இருந்தது. தற்பொழுது அரசு அறிவித்துள்ள மனை நிலங்களை முறைபடுத்தும் திட்டத்தில் மேற்படி இரண்டு வீட்டு மனைகளுக்கும் அரசு அங்கீகாரம் பெற வேண்டி 22.03.2018 ம் தேதியன்று நான் ஆன்லைன் மூலம் பதிவு செய்ய பதிவு கட்டணமாக ரூ.1,000/- செலுத்தி DTCP/L/0065877/2017 என்ற எண் படி பதிவு செய்து பதிவிற்குரிய சிலிப் பெற்றுள்ளேன். சுமார் 10 நாட்கள் கழித்து மேற்படி பதிவு சிலிப்புடன் பத்திர நகல், வில்லங்க சான்று, மனை வரைபடம் மற்றும் பட்டா ஆகியவற்றின் நகல்களுடன் சேலம், சுப்பிரமணிய நகரில் உள்ள நகர் ஊரமைப்பு இணை இயக்குனர் அலுவலகம், சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம் 636 005 என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் சூப்பர்வைசராக பணியாற்றிவரும் சின்னதுரை என்பவரை மேற்படி அலுவலகத்தில் சந்தித்து மேற்படி ஆவண நகல்களை கொடுத்து எனது வீட்டு மனைகளுக்கு அப்ரூவல் கொடுக்கும்படி கேட்டேன். மேற்படி ஆவண நகல்களை பெற்றுக்கொண்டு சின்னதுரை ஒரு விண்ணப்ப படிவத்தை கொடுத்து அந்த அலுவலகத்தில் அவருக்கு கீழ் பணிபுரியும் உதவியாளர் கார்த்திக் என்பவர் மூலமாக மேற்படி விண்ணப்ப படிவத்தில் மேற்படி ஆவண விவரங்களை எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு என்னிடம் எனது செல்போன் எண்ணை கேட்டு அதில் எழுதிக்கொண்டு பிறகு தகவல் சொல்வதாக சொல்லி என்னை அனுப்பிவிட்டார். பிறகு அவரிடம் இருந்து எந்த தகவலும் வராததால் கடந்த 15.05.2018 ம் தேதி மேற்படி அலுவலகத்திற்கு மதியம் சுமார் 1.30 மணியளவில் சென்று மேற்படி சூப்பர்வைசர் திரு. சின்னதுரை, அவர்களை சந்தித்து எனது பிளாட் அப்ரூவல் தொடர்பாக கேட்டேன். அவர்

கார்த்தி என்பவரிடம் சொல்லி எனது மனுக்கோப்பை தேடி எடுத்துவரச் செய்து பார்வையிட்டார். அந்த கோப்பு எண்.881/18 என இருந்தது. பின்னர் சின்னதுரை அவர்கள் என்னிடம் மேற்படி எனது பிளாட் எண்.21 ல் பகுதி மற்றும் பிளாட் எண்.22 ஆகியவைகளுக்கு அப்ரூவல் கொடுப்பது சம்பந்தமாக தனது அசிஸ்டென்ட் சதீஸ் என்பவர் உங்களிடம் பேசுவார் எனறு கூறினார். அப்போது அங்கு வந்த சதீஸ் என்பவர் என்னை மேற்படி சின்னதுரை அவர்களின் அலுவலகத்திற்கு வெளியே அழைத்து வந்து ரூ.5,000/- ஐ சின்னதுரை சாருக்கு தனியாக கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்தால் சீக்கிரம் அப்ரூவல் கிடைத்துவிடும் என்றும் கூறினார். அதற்கு நான் எனக்கு உடல்நிலை சரியில்லை, தறியும் நடத்த முடியவில்லை அவ்வளவு தொகை புரட்ட முடியாது என்று கூறினேன். அதற்கு சதீஷ் பணமில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறினார். பிறகு வியாழக்கிழமை உங்கள் வீட்டிற்கு வருகிறேன் அப்போது பணத்தை ரெடி செய்து வையுங்கள் என்று கூறி எனது வீட்டு முகவரியை கேட்டார். நானும் பார்க்கலாம் சார் என்று சொல்லிவிட்டு வீட்டு முகவரியைச் சொள்னேன். பின்னர் 17.05.2018 ம் தேதி காலை சுமார் 8.00 மணியளவிற்கு எனது வீட்டிற்கு வந்த சதீஷ் பணம் ரெடிசெய்து விட்டீர்களா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் தாங்கள் கேட்ட பணத்தை கொடுத்தால் தான் வீட்டு மனைகளுக்கு அரசு அங்கீகார உத்திரவு வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறினார். என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொல்லி நான் வேண்டுமானால் சின்னதுரை சாரை சந்தித்து என் நிலைமையை சொல்லி கேட்டு பார்க்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி அவரிடம் நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு புறப்பட்டு சென்றார். , நேற்று 17.05.2018 ம் தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் மேற்படி திரு. சின்னதுரை பணிபுரியும் அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது அங்கு இருந்த சதீஷ் என்னை பார்த்து நாங்கள் கேட்ட பணம் கொண்டு வந்தீர்களா என்று கேட்டார். அதற்கு நான் சூப்பர்வைசர் சின்னதுரை சாரை நேரடியாக சந்தித்து இது தொடர்பாக பேசவேண்டும் என்று கூறிவிட்டு திரு. சின்னதுரை அவர்களை சந்தித்து அய்யா, சதீஸ் என்னிடம் எனது வீட்டு மனைகளுக்கு அங்கீகாரம் வழங்க ஏற்பாடு செய்ய தனியாக ரூ.5,000/- வேண்டும் என்று நீங்கள் கேட்டதாக என்னிடம் சொன்னார். நான் தறி ஓட்டி வருகிறேன். எனக்கு உடல் நிலையும் சரியில்லை. அவ்வளவு பணம் கொடுக்கும் நிலையில் இல்லை. பார்த்து செய்யுங்க சார் என்றேன். அதற்கு அவர் சரி நான் பார்த்து சதீசிடம் சொல்லிவிடுகிறேன். அவர் உங்களுக்கு எவ்வளவு என்று சொல்லுவார் என்று கூறினார். அதன் பின் வெளியே இருந்து அங்கு வந்த சதீஷ் மேற்படி சின்னதுரையிடம் அருகில் சென்று ஏதோ பேசிவிட்டு வந்து என்னை அலுவலகத்திற்கு வெளியே அழைத்து வந்து சார் சொல்லி விட்டார். நீங்கள் ரூ.4,000/- கொடுங்கள் போதும். நாளைக்கு டாக்குமென்ட்ஸ் ரெடியாகிவிடும். நாளை பணம் ரெடி பன்னி கொண்டு வாங்க என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். நான்

என்ன செய்வது என்று தெரியாமல் அங்கிருந்து புறப்பட்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது வீட்டு மனை நிலங்களை முறைப்படுத்தி அங்கீகாரம் பெறுவதற்காக மேற்படி அலுவலகத்தில் பணி புரியும் சுப்பர்வைசர் சின்னதுரை மற்றும் அவரது தனிப்பட்ட உதவியாளர் சதீஸ் ஆகியோர் லஞ்சமாக கேட்ட ரூ.4,000/- த்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 18.05.2018. (Tr.D.T.Jeevanantham).

Sir, Received the above computer typed complaint on 18.05.2018 at 09.00 hrs and registered a preliminary enquiry in PE.141/2018/TCP/SL at 10.30hrs on 18.05.2018 Sd xxxx 18.05.2018. (N.K.RAVICHANDRAN), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

During verification, the allegation mentioned in the complaint is found to be genuine. Demand of illegal gratification was confirmed through the sources. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.10/AC/2018 u/s 7 of PC Act 1988 at 12.30 hrs today on 18.05.2018 and took up for investigation. Sd xxxx 18.05.2018 (N.K.RAVICHANDRAN), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.D.T.Jeevanantham, S/o Thiyagarajan, D.No.213/122, Pandurangan Vittal Street Extension, Karungalpatti, Gugai, Salem.6 is submitted to the Chief Judicial Magistrate / Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

18/05/18

(N.K.RAVICHANDRAN),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.